மக்கள் குரல்
10 SEP 2020
நாள்:

மாநகராட்சி பள்ளிகளை சீர்மிகு மாதிரி பள்ளிகளாக மாற்றும் திட்டத்தில்

# கணித ஆசிரியர்களுக்கு பயிற்சி பட்டறை: கமிஷனர் துவக்கினார்

சென்னை, செப். 10

சீர்மிகு நகர திட்டம், "சிட்டிஸ்" திட்டத்தின் கீழ் மாநகராட்சி பள்ளிகளை சீர்மிகு மற்றும் மாதிரி பள்ளிகளாக மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாக கணித ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறையை ஆணையாளர் கோ.பிரகாஷ் துவக்கி வைத்தார்.



மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 திட்டங்களில் ஒன்று சீர்மிகு மற்றும் மாதிரி மாநகராட்சி பள்ளிகள் சிட்டிஸ் திட்டத்தின் மூலம் மாநகராட்சி பள்ளிகளில் தரமான உட்கட்டமைப்பு உடைய வகுப்பறைகள், கற்றல் கற்பித்தலுக்கான ஸ்மார்ட் வகுப்பறைகள், பள்ளிகளின் மேம்பட்ட விளையாட்டு வசதிகளையும் ஏற்படுத்துவதே முக்கியமான நோக்கம்.

மேலும், மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு கற்றல் கற்பித்தலில் புதிய நுட்பங்களை கையாளுதல், மாணவர்களுக்கு விருப்பமான பள்ளியாக மாநகராட்சி பள்ளிகளை மாற்றுவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.

அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிட்டிஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக மாநகராட்சி தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் கணித ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறையை ஆணையாளர் கோ.பிரகாஷ், நேற்று (9ந் தேதி) துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இத்திட்டத்தை துவக்கி வைத்த ஆணையாளர், சென்னைப் பள்ளிகளை ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்றுவதற்கான தொடக்கமாக சிட்டிஸ் திட்டம் அமைகிறது. இத்திட்டத்தின் நோக்கம் மாணவ சமுதாயத்தின் கற்றல் திறனை மேம்படுத்துவதாகும். கல்வித் துறையில் செய்யப்படும் முதலீடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், ஆசிரியர்கள் இப்படிப்பட்ட பயிற்சிகளில் ஆர்வத்துடன் பங்கேற்று பயிற்சிப் பெற்று அதனை மாணவர்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மண்டல அலுவலர் திருமுருகன், உதவி கல்வி அலுவலர்கள் முனியன், தன்யா குமாரி, சென்னை சைதாப்பேட்டை மகளிர் மேல்நிலைப்பள்ளி முதல்வர் பத்மஜா மற்றும் திட்ட மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.